# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# எட்டாம் பத்து

## முதல் திருமொழி - சிலை இலங்கு
## திருக்கண்ணபுரம் 1
## [தலைமகனிடத்து ஈடுபட்ட தலைமகளது செயல் கண்ட தாய் வியந்து கூறிய பாசுரம்]

** சிலை இலங்கு பொன்னாழி * திண்படை தண்டு
ஒண்சங்கம் என்கின்றாளால் *
மலை இலங்கு தோள் நான்கே * மற்று அவனுக்கு
எற்றே காண் என்கின்றாளால் **
முலை இலங்கு பூம்பயலை * முன்போட
அன்போடி இருக்கின்றாளால் *
கலை இலங்கு மொழியாளர் * கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொலோ? 1

** செரு வரை முன் ஆசறுத்த * சிலை அன்றோ?
கைத்தலத்தது என்கின்றாளால் *
பொரு வரை முன் போர் தொலைத்த * பொன்னாழி
மற்றொரு கை என்கின்றாளால் **
ஒருவரையும் நின் ஒப்பார் * ஒப்பிலா
என் அப்பா! என்கின்றாளால் *
கரு வரை போல் நின்றானைக் * கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொலோ? 2

துன்னு மாமணி முடி மேல் * துழாய் அலங்கல்
தோன்றுமால் என்கின்றாளால் *
மின்னு மாமணி மகர குண்டலங்கள் *
வில் வீசும் என்கின்றாளால் **
பொன்னின் மாமணி ஆரம் * அணி ஆகத்து
இலங்குமால் என்கின்றாளால் *
கன்னி மாமதிள் புடை சூழ் * கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொலோ? 3

தார் ஆய தண்துளப * வண்டுழுத
வரை மார்பன் என்கின்றாளால் *
போர் ஆனைக் கொம்பொசித்த * புட்பாகன்
என் அம்மான் என்கின்றாளால் **
ஆரானும் காண்மின்கள் * அம்பவளம்
வாய் அவனுக்கு என்கின்றாளால் *
கார் வானம் நின்றதிரும் * கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொலோ? 4

அடித்தலமும் தாமரையே * அங்கைகளும்
பங்கயமே என்கின்றாளால் *
முடித் தலமும் பொற்பூணும் * என் நெஞ்சத்து
உள் அகலாது என்கின்றாளால் **
வடித் தடங்கண் மலரவளோ * வரை ஆகத்து
உள் இருப்பாள் என்கின்றாளால் *
கடிக்கமலம் கள் உகுக்கும் * கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொலோ? 5

பேர் ஆயிரம் உடைய பேர் ஆளன் *
பேர் ஆளன் என்கின்றாளால் *
ஏரார் கன மகர குண்டலத்தன் *
எண்தோளன் என்கின்றாளால் **
நீரார் மழை முகிலே * நீள் வரையே
ஒக்குமால் என்கின்றாளால் *
காரார் வயல் அமரும் * கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொலோ? 6

செவ்வரத்த உடை ஆடை * அதன் மேல் ஓர்
சிவளிகைக் கச்சு என்கின்றாளால் *
அவ்வரத்த அடி இணையும் * அங்கைகளும்
பங்கயமே என்கின்றாளால் **
மை வளர்க்கும் மணி உருவம் * மரகதமோ!
மழை முகிலோ! என்கின்றாளால் *
கை வளர்க்கும் அழல் ஆளர் * கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொலோ? 7

கொற்றப் புள் ஒன்றேறி * மன்றூடே
வருகின்றான் என்கின்றாளால் *
வெற்றிப் போர் இந்திரற்கும் * இந்திரனே
ஒக்குமால் என்கின்றாளால் **
பெற்றக்கால் அவன் ஆகம் * பெண் பிறந்தோம்
உய்யோமோ! என்கின்றாளால் *
கற்ற நூல் மறை ஆளர் * கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொலோ? 8

வண்டமரும் வனமாலை * மணி முடி மேல்
மண நாறும் என்கின்றாளால் *
உண்டிவர் பால் அன்பு எனக்கென்று * ஒரு காலும்
பிரிகிலேன் என்கின்றாளால் **
பண்டிவரைக் கண்டு அறிவது எவ்வூரில்? *
யாம் என்றே பயில்கின்றாளால் *
கண்டவர் தம் மனம் வழங்கும் * கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொலோ? 9

** மா வளரு மென்னோக்கி * மாதராள்
மாயவனைக் கண்டாள் என்று *
கா வளரும் கடிபொழில் சூழ் * கண்ணபுரத்து
அம்மானைக் கலியன் சொன்ன **
பா வளரும் தமிழ் மாலை * பன்னிய நூல்
இவை ஐந்தும் ஐந்தும் வல்லார் *
பூ வளரும் கற்பகம் சேர் * பொன்னுலகில்
மன்னவராய்ப் புகழ் தக்கோரே 10

**அடிவரவு:** சிலை செருவரை துன்னு தார் அடி பேர் செவ்வரத்த கொற்றம் வண்டு மாவளரும் தெள்ளியீர்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**